தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
|---|---|
| திகதி | 25 யூலை 2025 |

திரு. இவான் பப்பாஜீயோர்ஜியு தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுவின் இலங்கைக்கான அண்மைய விஜயத்தின் நிறைவில் பன்னாட்டு நாணய நிதியமானது பின்வரும் ஊடக வெளியீட்டினை 2025 யூலை 25 அன்று வெளியிட்டதுடன், இதனைக் கீழேயுள்ள இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

https://www.imf.org/en/News/Articles/2025/07/24/pr-25264-sri-lanka-imf-staff-concludes-visit-to-sri-lanka

## பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தினை நிறைவுசெய்துள்ளனர்

விஜயத்தின் நிறைவிலான பத்திரிகை வெளியீடுகள் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுக்கள் நாட்டிற்கு விஜயம்செய்த பின்னர் கண்டறியப்பட்ட பூர்வாங்க விடயங்களைத் தெரிவிக்கின்ற கூற்றுக்களை உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்களின் கருத்துக்களேயன்றி, அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இவ்விஜயமானது சபைக் கலந்துரையாடலொன்றிற்கு வழிவகுக்காது.

- இலங்கை அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புக்களானவை சிறப்பாகச் செயலாற்றுகின்ற வளர்ச்சி, பணவீக்கம் இலக்கினை நோக்கி முன்னேற்றமடைதல், வெளிநாட்டு ஒதுக்குகளைத் திரட்டுதல் மற்றும் இறை வருவாய்கள் மேம்படுதல் என்பவற்றுடன் பயனளிக்கின்றன.

- வர்த்தகக் கொள்கையின் நிச்சயமற்றதன்மை மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றிற்கு மத்தியில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் மீட்சியினை அடைவதற்கும் அதிர்வுகளுக்கான இலங்கையின் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும் மறுசீரமைப்பு உத்வேகத்தை நிலைநாட்டுதல் இன்றியமையாததாகும்.

- பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற முன்னேற்றமானது விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் ஐந்தாவது மீளாய்வின் பின்னணியில் முறையாக மதிப்பிடப்படும்.

**வொசிங்டன், டி.சி:** இலங்கைக்கான பன்னாட்டு நாணய குழுப் பிரதானி திரு. இவான் பப்பாஜீயோர்ஜியு தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிக்குழுவொன்று அண்மைய பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மூலம் ஆதரவளிக்கப்பட்ட அதிகாரிகளின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பொருளாதார மற்றும் நிதிசார் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பனவற்றை பற்றிக் கலந்துரையாடுவதற்காக 2025 யூலை 21 இலிருந்து 25 வரையான காலப்பகுதியில் கொழும்பிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

விஜயத்தின் முடிவில் திரு. பப்பாஜியோர்ஜியு பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

"இலங்கை அதிகாரிகளின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது பாராட்டத்தக்க பெறுபேறுகளை விளைவிக்கின்றது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி 2025இன் முதலாவது காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியுற்று, எதிர்பார்க்கைகளை விடவும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது. முதன்மைப் பணவீக்கமானது 2025 இன் இரண்டாம் காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் -1.1 சதவீதமாகவிருந்ததுடன் இலக்கினை நோக்கிப் படிப்படியாகத் திரும்பலடைந்தது. மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2025 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனாகவிருந்த அதேவேளை, பெறுமதிசேர்க்கப்பட்ட வரியின் வலுவான செயலாற்றம் அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான வரிகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு வரி வருவாய்ச் சேகரிப்பு தொடர்ந்தும் மேம்பட்டது.

"பொருளாதாரத் தோற்றப்பாடு சாதகமாகவிருக்கின்ற அதேவேளை, இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான சாத்தியமான உயர்ந்த வரிகள், தொடர்ச்சியான வர்த்தகக் கொள்கையின் நிச்சயமற்றதன்மை மற்றும் தீவிரமடைந்துள்ள புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றின் பின்னனியில் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் அதிகரித்துள்ளன. மறுசீரமைப்பு உத்வேகத்தினைப் பேணுதல் மற்றும் இறை ஏற்பாடு மற்றும் வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை கட்டியெழுப்புதல் என்பனவற்றின் இன்றியமையாத முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இம்மறுசீரமைப்புக்கள் அதிர்வுகளுக்கான இலங்கையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தி, இற்றைவரை கடினமாக உழைத்துப்பெற்ற பொருளாதார முன்னேற்றத்தைப் பாதுகாக்கும். அத்தகைய அதிர்வுகள் இடம்பெறுமாயின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் வரையறைகளுக்குள் அவை தீர்க்கப்படும்.

"பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதானது இறை வருவாய்களைத் திரட்டுவதற்கான நீடித்து நிலைத்திருக்கும் முயற்சிகளை வேண்டிநிற்கின்றது. இலங்கையின் படுகடன் நிலைபெறுதன்மையினை மீளமைப்பதற்கு முக்கிய தேவைப்பாடான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவீதம் கொண்ட நடுத்தரகால முதலாந்தர நிலுவைக் குறிக்கோளைத் தொடர்ந்தும் அடைவதற்கு 2026 வரவுசெலவுத் திட்டமானது வலுவான வருவாய் வழிமுறைகள் மற்றும் பொருத்தமான செலவிடல் ஒதுக்கீடுகள், நிகழ்ச்சித்திட்ட வழியலகுகளுடன் ஒத்திசைவாக இருத்தல் என்பனவற்றின் மூலம் துணையளிக்கப்பட வேண்டும். வரி விலக்குக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல், வரி இணக்கத்தினை மேம்படுத்துதல், வரித் தளத்தை விரிவுபடுத்தல் மற்றும் செலவின நிலுவைகள் மீண்டும் தோற்றம்பெறுவதைத் தவிர்த்தல் உள்ளடங்கலாக பொது நிதி முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல் என்பன முக்கியமானவையாக விளங்குகின்றன. அரசாங்க-தனியார் பங்குடமைகள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், பொதுக் கொள்வனவு மற்றும் அரச சொத்து முகாமைத்துவம் என்பன மீதான வரவிருக்கும் சட்டமூலங்கள் பொது நிதி முகாமைத்துவச் சட்டத்துடனும் சிறந்த நடத்தைகளுடனும் ஒத்திசைவானதாக இருக்க வேண்டும். இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் வலு உபயோகச் சேவைகளின் நிதியியல் நிலைபெறுதன்மைக்கு ஆதரவளிப்பதற்கும் செலவு மீட்பு சக்தி விலையிடல் பேணப்பட வேண்டும். அதே சந்தர்ப்பத்தில், மேம்பட்ட இலக்கிடல், உள்ளடக்கம் மற்றும் போதுமான சமூக ஆதரவு என்பனவற்றினூடாக வறியவர்களையும் பாதிக்கப்படத்தக்கவர்களையும் பாதுகாத்தல் முக்கியமானதாகும்.

"படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறை நிறைவடைதலை அண்மிக்கின்றது. படுகடன் நிலைபெறுதன்மையினை மீளமைத்துக்கொள்வதற்கும் முதலீட்டாளர் நம்பிக்கையினை மீளப்பெறுவதற்கும் எஞ்சியிருக்கின்ற அலுவல்சார் மற்றும் வர்த்தகக் கடன்கொடுநர்களுடனான இருதரப்பு உடன்படிக்கைகளை விரைவாக நிறைவுசெய்வதனை நாம் ஊக்குவிக்கின்றோம். பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தைச் செயற்படுத்துவதை நோக்கிய முன்னேற்றத்தை விரைவுபடுத்த வேண்டும்.

"நாணயக் கொள்கையானது முன்மதிமிக்கதாகவிருப்பதுடன் விலை உறுதிப்பாட்டிற்கு முன்னுரிமையளிக்க வேண்டும். வரவுசெலவுத் திட்டத்தின் நாணய நிதியிடலிலிருந்து விலகியிருத்தல் உள்ளடங்கலாக மத்திய வங்கியின் சுயாதீனம் தொடர்ந்தும் காக்கப்படவேண்டும். தொடர்ச்சியான ஒதுக்குத் திரட்டுதல் மற்றும் செலாவணி வீத நெகிழ்வுத்தன்மை என்பன முக்கிய முன்னுரிமைகளாகக் காணப்படுகின்றன. செயற்படாக் கடன்கள் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளல், அரசிற்குச் சொந்தமான வங்கிகளின் ஆளுகையையும் மேற்பார்வையையும் வலுப்படுத்தல் அத்துடன் கடன்தீராற்றலையும் தீர்மானக் கட்டமைப்புக்களையும் மேம்படுத்தல் என்பன நிலைபேறான கொடுகடன் வளர்ச்சியைப் புத்துயிரளிக்கச் செய்வதற்கும் தனியார் துறை அபிவிருத்திக்கும் முக்கியமானவையாகும்.

"அரசாங்க நடவடிக்கைத் திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட ஆளுகை மறுசீரமைப்புக்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்தலானது ஊழல் ரீதியாக பாதிக்கப்படும்தன்மைகளைத் தீர்ப்பதில் இன்றியமையாததாகும்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டைத் தாராளமயப்படுத்தல், போட்டித்தன்மையினை அதிகரித்தல், பெண் தொழிற்படைப் பங்கேற்பினை ஊக்குவித்தல் மற்றும் காலநிலை மாற்றத்தினைக் கையாளுதல் என்பனவற்றிற்கான கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்கள் சாத்தியமான வளர்ச்சியினை அதிகரிக்க உதவும்.

‘‘பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவுசெய்வதிலுள்ள முன்னேற்றம் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது மீளாய்வின் பின்னணியில் முறையாக மதிப்பீடு செய்யப்படும். ஐந்தாவது மீளாய்வின் கால வரையறை அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும்.

‘‘பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவானது சனாதிபதியும் நிதி அமைச்சருமான அதிமேதகு அனுர குமார திசாநாயக்க, கௌரவ தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் பேராசிரியர். அனில் ஜயந்த பர்னாந்து, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் முனைவர் ஹர்ஷன சூரியப்பெரும, சனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் திரு. துமிந்த ஹுலங்கமுவ, டிஜிட்டல் பொருளாதாரம் மீதான சனாதிபதியின் பிரதம ஆலோசகர் முனைவர். ஹான்ஸ் விஜயசூரிய மற்றும் ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் ஆகியோருடன் பன்னாட்டு நாணய நிதியக் குழு சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தது. தனியார் துறை, குடிசார் சமூக நிறுவனங்கள், மற்றும் அபிவிருத்தி பங்காளர்களின் பிரதிநிதிகளையும் நாணய நிதியக் குழு சந்தித்தது.

‘‘விஜயத்தின் போதான உன்னதமான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூறிக்கொள்வதுடன் நிச்சயமற்ற இக்காலகட்டத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது கடமைப்பொறுப்பினை நாம் மீளஉறுதிப்படுத்துகின்றோம்’’.